பாசன வசதியுண்டாக்கும் இத்திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த மதிப்பீட்டுத் தொகையில் ரூ. 3 இலட்சத்தை அரசு ஏற்கும். மீதமுள்ள ரூ. 3.09 இலட்சம் கிருஷ்ணகிரியில் உள்ள நிலவள வங்கியிடமிருந்து கடனாக பெறப்படும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப்பாசன வசதியை உண்டாக்கும் செயல் திட்டம் எப்போது உருவாக்கப்பட்டது? இதுவரையிலும் அதனுடைய செயல் திட்டத்தில் என்ன நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலே இதற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அது குண்டலபட்டு நீரேற்று கூட்டுறவு சங்கத்தின் மூலம் அமல் செய்யப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாராபுரத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி.

*வினா எண் 118 திரு. ரா. அய்யாச்சாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் நகரத்தில் கால்நடை மருத்துவக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) இல்லை.
(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ரா. அய்யாச்சாமி: தாராபுரத்திலே ஒரு கல்லூரி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அந்தக் கல்லூரி கட்ட முடியவில்லையென்றாலும் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூலக் கேள்வியே கால்நடை மருத்துவக் கல்லூரி பற்றியதுதான்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவக்கல்லூரி எத்தனை இருக்கின்றன? அந்த இடத்திலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்வி இல்லை.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, தாராபுரம் ஒரு பிற்பட்ட வறண்ட பகுதியாகையினால் அங்கே காங்கேயம் இனப்பசுக்களும் மேச்சேரி ஆடுகளும் சிறந்து விளங்குகின்ற

1979 நவம்பர் 5]

இடமாதலால் விவசாயக் கல்லூரி அங்கே அமைப்பது முக்கியம் எனபதை அரசு உணர்ந்து இனிமேலாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மூலக்கேள்வி கால்நடை மருத்துவக் கல்லூரியைப் பற்றியது மாண்புமிகு உறுப்பினர் கேட்பது விவசாயக் கலலூரி பற்றியது. போதுமான அளவிற்கு விவசாயக் கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே தகுந்த மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெருந்துறை காசநோய் மருத்துவமனை.

*வினா எண். 119 டாக்டர் ஏ. பொன்னுசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை காசநோய் மருத்துவமனை நிதி பற்றாக்குறையினால் சரிவர செயல்பட இயலாத நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) இந்நிலையம் ஆண்டுதோறும் ரூ. 4 லட்சம் பற்றாக் குறையால் நடத்தப்படுவதால் அரசு இந்நிலையத்திற்கு அளிக்கும் மானியத்தொகையான ரூ. 2.00 இலட்சத்திலிருந்து ரூ. 4.00 இலட்சங்களாக உயர்த்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

டாக்டர் ஏ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்யப்பட்டுப் படுக்கைகள் கொடுக்கமுடியாமல் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இங்கு இடம் கிடைக்குமா அல்லது அங்கு இடம் கிடைக்குமா என்று காத்துக்கொண்டிருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆலோசிக்குமா? உலகப் புகழ் பெற்ற அந்த மாபெரும் மருத்துவமனையை காச நோய் ஆராய்ச்சி நிலையமாக மாற்ற அரசு ஆலோசிக்குமா? நிதிநிலை இல்லாததால் பிணியாளர்கள், பணியாளர்கள் விகிதம் சரியில்லாததால் பிணியாளர்களுக்குச் சரியான பணி கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1965-ஆம் ஆண்டில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு, 1971–72ஆம் ஆண்டிலே ரூபாய்